கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.121/2019

வா.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **சிதம்பரம்** | தொழில் | |
| த/க பெயர் | **நட்ராஜன்** | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 28.01.2025 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

**வா.சா.ஆ.2 இன்று ஆஜராகி சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கின் வாதி எனது உறவினர் என்றால் இல்லை. வாதி தினகரனை எப்படி தெரியும் என்றால் பிரதிவாதி மூலம் எனக்கு பழக்கம். வாதியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் தாவாவில் பணம் வாதியிடம் பெற்ற பின்பு தான் தெரியும். 1 ஆம் வாதி தினகரன் கரூர் மாவட்டம் கடவூர் தாலுகாவை கோட்டகரையை சேர்ந்தவர் என்றால் சரிதான். 1 ஆம் வாதி தினகரன் இறக்கும் போது வடமதுரையில் தான் இருந்தார். அவர் எத்தனை வருடம் வடமதுரையில் இருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. தினகரன் மணிமாலாவிற்கு எங்கு வைத்து பணம் கொடுத்தார் என்றால் கரூர் மாவட்டம், கடவூர் தாலுகாவில் கோட்டக்கரை வீட்டில் வைத்து பணம் கொடுத்தார். 15.02.2017 ஆம் தேதி பணம் கொடுத்தார் அதன் பின்னர் நவம்பர் 2016 தேதி பண மதிப்பீழப்பீடு வந்தது என்றால் எனக்கு தெரியும். 01.01.2017 ஆண்டுக்கு பின்னர் தான் புதிய பணத்தாள் புழக்கத்திற்கு வந்தது என்றால் தெரியும். எனவே, 1 ஆம் வாதி வங்கியில் இருந்து தான் பணத்தை எடுத்து பிரதிவாதிக்கு கொடுத்திருக்கு முடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரூ.20,00,000/- எத்தனை கட்டு, எவ்வளவு ரூபாய்க்கானது என்பது பற்றி தெரியுமா என்றால் ஒரு பையில் வைத்து கொடுத்தார். பணம் எந்த எந்த நோட்டுகள் எத்தனை கட்டுகள் என்று எனக்கு தெரியாது. என்னை சாட்சி கையொப்பம் செய்ய மணிமாலா கேட்டதன் பேரில் போட்டேன். மணிமாலாவின் அப்பா பெயர் கோவிந்த சாமி. மணிமாலாவை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் அப்பா எனக்கு பழக்கம். மணிமாலாவின் கணவர் பெயர் எனக்கு தெரியாது. மணிமாலா எனக்கு பழக்கமான என்றால் தெரியும் பழக்கமில்லை.

மணிமாலாவின் அப்பா கொல்லம்பட்டி. மணிமாலா ஊர் கடவூர் பக்கத்தில் உள்ளது ஊர் பெயர் எனக்கு தெரியாது. 1ஆம் வாதியின் ஊருக்கு அருகில் உள்ளது என்று மணிமாலா சொன்னார்கள். மணிமாலாவின் ஊர் கடவூருக்கு பக்கத்தில் உள்ள ஊர் தான் என்று புரோநோட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா புரோநோட்டை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் உள்ள விபரம் தற்போது எனக்கு மறந்துவிட்டது. நான் சொல்வது போல் 15.02.2017 அன்று 1ஆம் வாதியிடம் மணிமாலா கடன் எதுவும் பெறவில்லை என்றாலும், அந்த வகைக்கு என்னை கூட்டிச்செல்லவில்லை என்றாலும், தாவா புரோநோட்டு எழுதுப்படவில்லை என்றாலும் சரியல்ல. தாவா புரோநோட்டில் என்னோடு சேர்த்து விஜி என்பவர் சாட்சி கையொப்பம் செய்தார். மணிமாலாவை எனக்கு யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக மணிமாலாவை தெரியும் என்றும், மணிமாலா பணம் பெற்றார் என்றும், மணிமாலா புரோநோட்டில் கையொப்பம் செய்தார் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN
Digitally signed by G SARAN
Date: 2025.01.28 17:59:36 +0530

Additional District Judge(FAC),

Dindigul.